மலர் 14 இதழ் 212

NAVAMANI (Tamil Daily) MADRAS

Regd. M No. 7897

Phone No 76190—76199

4 பக்கம் 20 காசு

நவமணி

கூட்டுறவு முறையில் தொழிலாளர்கள் நடத்தும் ஒரே தமிழ்த் தினசரி

சென்னை 15-4-74 திங்கள் வெளியூர் 16-4-74 செவ்வாய்

அம்பேத்கார் பெயரைச் சொல்லி

மக்களை ஏய்க்கும் சுயநலக்காரர்கள்: கருணாநிதி தாக்கு.

சென்னை, ஏப். 15—டாக்டர் அம்பேத்காரின் பெயரைச் சொல்லி, பலர் மக்களை ஏமாற்றிக்கொண்டு வருகிறார்கள் என்று முதலமைச்சர் கருணாநிதி கூறினார்.

வடசென்னையிலுள்ள வியாசர் பாடியில் டாக்டர் அம்பேத்கார் அரசினர் கலைக் கல்லூரித் திறப்புவிழா நேற்று மாலை 7 மணிக்கு நடைபெற்றது.

விழாவுக்கு கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் தலைமை வகித்தார்.

கட்டடத்தை முதல் அமைச்சர் கருணாநிதி திறந்து வைத்தார். 28 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 16 லட்சம் செலவில் கல்லூரி கட்டப்பட்டிருக்கிறது.

கட்டட வேலை முழுமை பெறாத நிலையில் கடந்த ஆண்டே இங்கு புகுமுக வகுப்புக்கள் நடைபெற்று வந்தன.

திறப்பு விழாவுக்கு பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர்.

விழா ஆரம்பத்தில் கல்வித் துறை இயக்குனர் எஸ். வி. சிட்டிபாபு வரவேற்புரை நிகழ்த்தினர்.

சென்னை கலெக்டர் ராமச்சந்திர ராவ் ரூ. 15.2 லட்சம் செலவில் கல்லூரி கட்டப்பட்டிருக்கிறது என்பதை விளக்கினர்.

கருணாநிதிக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் பொது மக்கள் சார்பில் ஏராளமான மலர் மாலைகளும், கைத்தறித் துணிகளும் அணிவிக்கப்பட்டன.

நாடாளு மன்ற உறுப்பினர் ஜி. குசேலர் சிறப்புரை ஆற்றுகையில் மீதமிருக்கும் 80 ஆயிரம் ரூபாயில் கல்லூரியைச் சுற்றி தடுப்பு சுவர் எழுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மின்சாரத் துறை அமைச்சர் ஓ. பி. ராமன் சிறப்பு மலரை வெளியிட்டுப்பேசுகையில், அம்பேத்காரின் பெயரில் இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழகத்தில்தான் கல்லூரி அமைக்கப்படுகிறது என்று கூறினர்.

மற்றும் முன்னுள் எம். பி. யான பி. சிவசங்கரன், கல்லூரிக்கு நிதி திரட்ட அமைக்கப்பட்டிருந்த குழு உறுப்பினர்களான ஏ. எல். சீனிவாசன், முன்னுள் சென்னை மேயர் அகமத் ஆகியோரும் பேசினர்.

இறுதியில் கல்லூரிக்கட்டடத்தை திறந்து வைத்து கருணாநிதி பேசியதாவது:—

இந்த விழா, நமது அகமெல்லாம் பூத்துக் குலுங்கும் ஒரு விழாவாகும்.

சுதந்தரம் பெற்று வெள்ளி விழா கொண்டாடிய ஆண்டில் இந்தக் கல்லூரிக்கு அடிக்கல்நாட்டப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குள் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது.

அம்பேத்கார், இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய ஒரு மாமேதை. ஆனால் அந்த அரசியல் சட்டம், அவர் எதிர்பார்த்த நல்ல விளைவுகளை உண்டாக்கவில்லை.

சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் மக்களை முன்னேற்ற நோக்குடன்— மத மாச்சரியம்— ஜாதிப்பேய் ஒழிய வேண்டும் என்ற நோக்குடன் அரசியல் சட்டத்தை வகுத்தார். மாநிலத்துக்கு மாநிலம் உரிமையுடன் செயல்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் அரசியல் சட்டத்தை உருவாக்கினர்.

இந்த அடிப்படை இலட்சியங்கள் நிறைவேருத காரணத்தால், தாம் உருவாக்கிய அரசியல் சட்டம் கொளுத்தப்படவேண்டும் என்று அம்பேத்கார் சொன்னர்.

பெற்ற சுதந்திரத்தை அனுபவிக்க முடியாமல் மானத்தோடு — மரியாதையோடு, மனிதனோடு தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ முடியவில்லையே என்பதை உணர்ந்து இப்படிப்பட்ட வேகமான அந்த வார்த்தையை வெளியிட்டார்.

இந்தியத் தலைவர்களில் ஒருவர் என மதிக்கத்தக்க அம்பேத்காரை வடநாட்டினர் பாராட்டவில்லை. இந்த வகையில் அம்பேத்காரின் பெயரில் முதலில் ஒரு கல்லூரியைத் துவக்குவதில் தமிழகம் பெருமையடைகிறது.

பத்திரிகைகள் போக்கு

இங்கு சத்தியவாணிமுத்து அம்மையார் பேசுகையில் கலைஞர் ஆணையிட்டால் உரிமையைக் காக்க கிளர்ச்சி செய்யவும் தயார் என்று குறிப்பிட்

2-ம் பக்கம் பார்க்க



பஸ் கவிழ்ந்து 15 பேர் பலி

கோட்டயம் ஏப். 15— செங்குத்தான மலைச்சரிவின் ஓரமாக சபரிமலையை நோக்சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று மலைச்சரிவில் 15 தடவை உருண்டு 1000 அடி பள்ளத்தாக்கில் போய் விழுந்தது. இதனுல் 15 பேர் மரணமடைந்தனர். 67 பேர் காயமடைந்தனர்.

அந்த பஸ் இவ்விதம் மலைச்சரிவில் பாறைகள்மீது மோதி உருக்குலைந்து பந்துபோல உருண்டபோது ஜன்னல்கள் வழியேயும், கதவு வழியேயும் பிரயாணிகள் கீழே விழுந்துகொண்டே இருந்தனர். கடைசியில் 1000 அடி கீழே இருந்த பள்ளத்தாக்கில் போய் அந்த பஸ் விழுந்தது.

அவ்விதம் பஸ் உருண்டபோது தூக்கியெறியப்பட்ட பிரயாணிகள் எழுப்பிய கூக்குரல் பள்ளத்தாக்கு பூராவிலும் எதிரொலித்தது.

சனிக்கிழமை மாலை நேரத்தில் இந்த விபத்து நடந்தது. சற்றுநேரத்தில் இருட்டிவிட்டதால் பஸ்ஸிலிருந்து தூக்கி எறியப்பட்டு பள்ளத்தாக்கில் சரிவி[illegible]

7-ம் பத்தி பார்க்க

அரிஜனங்கள் அர்ச்சகர்களாகும்

அரசியல் சட்டத்திருத்த தீர்மானம் நிறைவேறியது

சென்னை, ஏப். 15—தாழ்த்தப்பட்டவர்களையும் கோயில் அர்ச்சகராக நியமிக்க வழி செய்யும் வகையில் அரசியல் சட்டத்தை திருத்தவேண்டும் என்று கோரும் தீர்மானம் இன்று தமிழக சட்டசபையில் ஏகமனதாக நிறைவேறியது.

இந்தத் தீர்மானத்தை எல்லாக் கட்சி உறுப்பினர்களும் ஆதரித்துப் பேசினர்கள்.

கட்சித் தலைவர்கள் பேச்சுக்குப்பின், அறநிலைய அமைச்சர் கண்ணப்பன் பேசினர். இறுதியாக முதலமைச்சர் கருணாநிதி பேசியதும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

மாநில சுயாட்சிக்கு சுதந்திரா கட்சி ஆதரவு கொடுக்கும்?

சென்னை, ஏப். 15— தி. மு. கழகம் கோரிவரும் மாநில சுயாட்சிக்கு தமிழ்நாடு சுதந்திரா கட்சி ஆதரவு கொடுக்கும் என்று தெரிகிறது.

இது குறித்து தமிழ்நாடு சுதந்திரா கட்சிப் பொருளாளர் சி. டி. ராஜகோபால் ஒரு பேட்டியில் கூறியிருப்பதாவது:—

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பது தான் சுதந்திரா கட்சியின் கருத்து.

அதையேதான் தி.மு.கழகம் மாநிலசுயாட்சி என்று கேட்டு வருகிறது.

உறவுக்குக் [illegible]கை கொடுப்போம். உ[illegible]மைக்குக் குரல் கொடுப்போம் என்று முதல்வர் கருணாநிதி கேட்டு வருகிறார்.

மத்தியில் குவிந்துள்ள அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை.

அதனுல்தான் மாநிலங்களில் தொழில்துறை ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தொழில்கள் ஸ்தம்பிப்பதால், பல மாநிலங்களில் வன்முறை, கலவரம் ஏற்பட்டு பல ஆட்சிகள் நிகழ்ந்துள்ளன.

நிலையான ஆட்சியைப் பெற்றுள்ள தமிழகத்திற்கும் அந்த நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்ற அச்சம் எங்களுக்கு உண்டு.

குவிந்து கிடக்கின்ற அதிகாரங்கள் பரவலாக்கப்படாவிட்டால், பழைய களத்தைப் போல, சேரன், சோழன், பாண்டியன் ஆட்சியைப்போல் நாடு துண்டு துண்டாகத்தான் போகும்.

தி. மு. கழகம் கோரிவரும் மாநில சுயாட்சிக்கு எங்கள் கட்சி ஆதரவு தரும் என்பது எனது சொந்தக்கருத்தாகும்.

ஆனுலும் அதிக அதிகாரங்கள் மாநிலத்திற்குவேண்டும் என்பதில் [illegible]ங்களுக்கு ஆட்சேபனை இல்லை.

மேற்கண்டவாறு சி. டி. ராஜகோபால் ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார்.

பஸ் ஊழியருக்கு அமைச்சர் அறிவித்த

புதிய பரிசு திட்டம்

சென்னை, ஏப். 15—பல்லவா, சேரன், போன்ற பல்வேறு பஸ் போக்கு வரத்துக் கழகங்களைச் சேர்ந்த ஊழியர்கள் டீசல் எண்ணெய் உபயோகத்தைக் குறைத்தால் அவர்களுக்குப் பரிசு அளிக்கப்படும் என்று அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் இன்று அறிவித்தார்.

டீசல் எண்ணெயின் உபயோகத்தை அவர்கள் குறைத்தால், எந்த அளவுக்குக் குறைக்கப்பட்டதோ அதன் மதிப்பில் மூன்றில் ஒரு பங்கு சம்பந்தப்பட்ட பஸ் ஊழியர்களுக்குப் பங்கிட்டு அளிக்கப்படும் என்றும் அமைச்சர் அறிவித்தார்.

தி. மு. க. பஞ்சாயத்து யூனியன் தலைவர் நடுரோடில் படுகொலை

கோவை, ஏப். 15— கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தி. மு. க. பஞ்சாயத்து யூனியன் தலைவர் வி. அகத்தீசுவரக் கவுண்டர் நடுரோடில் படுகொலை செய்யப்பட்டார்.

இப் படுகொலை வீரப்ப கவுண்டனூரில் கடந்த சனிக்கிழமை இரவு நடந்தது.

அகத்தீசுவரகவுண்டர் கோவை மாவட்டம் பொள்ளாச்சி தாலுகாவில் உள்ள வீரப்பகவுண்டனூர் பஞ்சாயத்தின் தலைவராக இருந்து வந்தார்.

அவர் சனிக்கிழமையன்று இரவு [illegible]ரப்பகவுண்டனூரில் ரோடு வழியே நடந்துசென்றுகொண்டிருந்த போது 3 பேர் திடீரென்று அவரைத் தாக்கினர்.

மண்டை பிளந்தது

அகதீசுவர [illegible]வுண்டரை ஒருவர் துப்பாக்கியின் பின் கட்டையால் தாக்கினர். மற்றும் இருவர் அரிவாளால் வெட்டினர். மண்டையில் பலமாக அடி விழுந்ததால் அகத்தீசுவரக் கவுண்டரின் மண்டை பிளந்தது. அவர் அங்கேயே சுருண்டுவிழுந்து இறந்தார்.

அகத்தீசுவர கவுண்டரைக் காப்பாற்ற அருகில் இருந்தவர்கள் உதவிக்கு ஓடியபோது அவர்களும் தாக்கப்பட்டனர் இதனுல் உதவிக்கு ஓடியவர்களில் ஒருவருக்கு லேசான காயங்கள் ஏற்பட்டன.

அகதீசுவரக் கவுண்டர் படுகொலை சம்பந்தமாகப் போலீசார் கிருஷ்ணசாமி, சின்ன நாச்சி, பெரிய நாச்சி ஆகிய மூவரையும் தேடி வருகின்றனர்.

இப் படுகொலை வீரப்ப கவுண்டனூர் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

லட்சுமி வீட்டில் திருட்டு எதிரொலி:

'டாக்டர் என் கையை பிடித்து இழுத்தார்?' அழகி மீரா புகார்

சென்னை, ஏப். 15—நடிகை லட்சுமி வீட்டில் திருடியதாக மீரா என்ற அழகி கைது செய்யப்பட்டு, பிறகு விடுதலை செய்யப்பட்டார், அல்லவா?

அவர் போலீசுக்கு கொடுத்துள்ள வாக்குமூலத்தில் பல திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டுள்ளார். இதுபற்றிய விவரம் வருமாறு:—

நடிகை லட்சுமி வீட்டில் திருடியதாக மீரா என்ற அழகி கைது செய்யப்பட்டதாக 31ம்தேதி செய்தி வெளியாகியிருந்தது.

மீரா என்ற அந்தப் பெண் நடிகை லட்சுமி வீட்டில் வேலைக்காரியாக இருந்ததாகவும் கூறப்பட்ட[illegible]

திடீரென்று அவள் ஒரு நாள் காணுமல் போய்விட்டதாகவும், வீட்டில் டிரான்சிஸ்டர், கைக்கெடிகாரம், சில பித்தளை நகைகள் போன்ற பொருள்கள் காணுமல் போய்விட்டதாகவும் நடிகை லட்சுமி போலீசுக்குக் கொடுத்த புகாரின் பேரில், அழகி மீராவை தேனம்பேட்டைப் போலீசார் கைது செய்தார்கள். பிறகு அவர் விடுதலை செய்யப்பட்டாள்.

லட்சுமி கொடுத்த புகாரையொட்டி அழகி மீராவிடம் போலீசார் வாக்குமூலம் வாங்கினர்கள்.

அந்த வாக்குமூலத்தில், லட்சுமி வீட்டில், தான் எந்தப் பொருளையும் திருடவில்லை என்றும், வேண்டும் என்றே தன் மீது அபாண்டம் சுமத்தப்பட்டிருப்பதாகவும் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

லட்சுமியை, நடிகர் மோகன் அடிக்கடி வந்து சந்திப்பார். அந்த ரகசியங்களை நான் வெளியிட்டுவிடுவேன் என்று பயந்தே தன்மீது திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது என்றும் மீரா தனது வாக்கு மூலத்தில் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

இதுவும் தவிர, நடிகை லட்சுமியின் தாயாரான ருக்மணி[illegible], ஒரு டாக்டர் அடிக்கடி வந்து சந்திப்பது வழக்கம்.

அவர் ஒருநாள் என் கையைப் பிடித்து இழுத்தார். எனவேதான் நான் லட்சுமி வீட்டை விட்டு வெளியேறினேன் என்றும் மீரா கூறியிருப்பதாகத் தெரிகிறது.

நான் எந்தப் பொருளையும் திருடவில்லை. சினிமாவுக்கு உபயோகிக்கும் ஒரு பித்தளை ந[illegible]யை லட்சுமியே எனக்குத் தந்தார்.

மீரா என்று சொல்லப்படும் தனது பெயர் ரமா என்றும், லட்சுமி தான் அந்த பெயரை மீரா என்று மாற்றி வைத்ததாகவும் வாக்குமூலத்தில் கூறியிருப்பதாகத்தெரிகிறது.

"மற்றொருபித்தளை நகையை நான் கீழேகிடந்துஎடுத்தேன்; நான் எதுவும் திருடவில்லை" என்றும் தனது வாக்குமூலத்தில் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

இதுகுறித்துப் போலீசார் மேலும் தீவிரப் புலன் விசாரணை செய்து வருகிறார்கள்.

வாசகர்களுக்கு வேண்டுகோள்:

கண்ணதாசனுக்கு டெலிபோன் மூலம் கேள்விகள்

"கவிஞர் கண்ணதாசன் கேள்வி—பதில்" பகுதிக்குத் தினமும் நூற்றுக்கு மேற்பட்ட வாசகர்களிடமிருந்து கேள்விகள் வந்தவண்ணம் உள்ளன. கேள்விகள் அனைத்துக்கும் பதிலளிக்க கவிஞர் இசைந்துள்ளார். நாள்தோறும் முடிந்தவரையில் கேள்விகளுக்கான பதில்களை வெளியிட முயற்சித்து வருகிறோம்.

எனவே தங்களுடைய கேள்விக்கு பதில் வரவில்லையே என்று நினைவுபடுத்தி வாசகர்கள் கடிதம் எழுத வேண்டியதில்லை.

வாசகர்களில் சிலர் தங்களுடைய கேள்விகளை டெலிபோன் மூலம் கூறுகின்றனர். டெலிபோன் மூலம் கேள்விகளை எடுக்க இயலாது. வாசகர்கள் தங்கள் கேள்விகளை சுருக்கமாகவும் தெளிவாகவும் முழு விலாசத்துடன் எழுதி அனுப்ப வேண்டுகிறோம்.

இன்று வெளிவரவேண்டிய கேள்வி பதில் பகுதியுடன், நாளையிலிருந்து அதிக அளவில் கேள்வி பதில் வெளிவரும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்,
நவமணி

ஒரே மேடையில் காமராஜர், அமைச்சர் அன்பில்

திருச்சி, ஏப். 15—திருச்சியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் ஒரே மேடையில் காமராஜரும், அமைச்சர் அன்பில் தர்மலிங்கமும் பேசினர்.

காலஞ்சென்ற பழைய காங்கிரஸ் பிரமுகர் டி. எஸ். அருணுசலம் பிள்ளையின் சிலை திறப்பு விழாவின்போது அவர்கள் இருவரும் இவ்விதம் ஒரே மேடையில் தோன்றி பேசினர்.

திருச்சி மேலப்புலிவார் ரோடு, புளியந்தோப்பு சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள இச்சிலையை காமராஜ[illegible] திறந்து வைத்தார். இ[illegible]சிலை திருச்சி நகரசபை அமைத்ததாகும்.

காலஞ்சென்ற டி. எஸ். அருணுசலம், பிள்ளையின் நெருங்கிய நண்பர் என்னும் முறையில் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் இந்த விழாவில் கலந்து கொண்டு அருணுசலம் பிள்ளை நாட்டுக்குச் செய்துள்ள சேவையைப் பாராட்டினர்.

காமராஜர் பேசுகையில் அரசியல் தலைவர்கள் அனைவரும் கட்சி நலனைவிட நாட்டின் நலனையே பெரிதாகக் கருத வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

நாட்டை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி பற்றி காமராஜர் கவலை தெரிவித்து இந்த நெருக்கடியை சமாளிக்க அரசியல் கட்சிகளின் தலைவர்கள் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

டி. எஸ். அருணுசலம் பிள்ளையின் நெருங்கிய நண்பரான ஏ. கிருஷ்ணசாமி வாண்டையார் விழாவுக்குத் தலைமைவகித்தார். அவருக்கு நகரசபைத் தலைவர் டாக்டர் வி. கே. ரங்கநாதன் வரவேற்பிதம் வாசித்தளித்தார்.

5-ம் பத்தித் தொடர்ச்சி

குற்றுயிராகக் கிடந்தவர்களை மீட்க முடியவில்லை.

எங்கும் ஒரே இருட்டு. அத்துடன் விபத்து நடந்த இடத்தில் காட்டு யானைகளின் நடமாட்டம் உண்டு. எனவே மீட்புப்பணிக்காக வந்தவர்கள் அந்த இருட்டில் மலைச்சரிவில் கிடந்தவர்களை மீட்கப் பள்ளத்தாக்கில் இறங்க முன்வரவில்லை.

அந்த பஸ் மலைச்சரிவில் சென்று கொண்டிருந்தபோது எதிரே ஒரு கார் வந்தது. அ[illegible] பகுதியில் ரோடு மிகக் [illegible]லாக இருந்தது. வந்த கார் [illegible] இடமளி[illegible] மலைச்சரி[illegible] ஒதுங்கிய[illegible] பள்ளத்தா[illegible] உண்டது.

யார் யாரோ டைரக்டர் ஆகிருர்கள்: பட அதிபர் ஆர்.எம்.வீரப்பன் பேச்சு

சென்னை, ஏப். 15— 'தமிழ்த் திரையுலகில் யார் யாரோ டைரக்டர் ஆகிருர்கள்' என்று அ. தி. மு. க. கலைப் பிரிவுச் செயலாளர் ஆர். எம். வீரப்பன் காட்டமாகத் தாக்கிப் பேசினுர்.

''சொல்லத்தான் நினைக்கிறேன்'' வெற்றி விழா சென்னை தியாகராய நகர் மகாலட்சுமி கல்யாணமண்டபத்தில் நடைபெற்றது. விழாவில் கலந்துகொண்டு பட அதிபரும், அ. தி. மு. க. கலைப் பிரிவுச் செயலாளருமான ஆர். எம். வீரப்பன் பேசும்போது கூறியதாவது:—

டைரக்டர் பாலச்சந்தரை பல ஆண்டுகளுக்கு முன்பே எனக்குத் தெரியும். அவருடைய சிறந்தஎழுத்து வன்மையைக் கேள்விப்பட்டு, அவரது நாடகங்களைப் பற்றி அறிந்து, 'தெய்வத்தாய்' படத்திற்கு வசனம் எழுதுவதற்குஅவரை ஏற்பாடு செய்தோம்.

எம். ஜி. ஆரிடம் பாலச்சந்தரைப் பற்றிக் கூறியவுடனேயே அவரும் ஏற்றுக்கொண்டார்.

சர்வ சாதாரணமாக இப்போது யார் யாரோ டைரக்டர்களாக வருகிருர்கள். கதை என்ருல் என்னவென்று தெரியாதவர்களெல்லாம் கதை எழுதுகிருர்கள், வசனமும் எழுதுகிருர்கள். திடீரென்று டைரக்டராகவும் ஆகிவிடுகிருர்கள்.

பத்து மற்ற மொழிப் படங்களைப் பார்த்து அதில் வருகின்ற காட்சிகளை எப்படித் தன் படத்தில் புகுத்தலாம் என்று நினைப்பவர்கள் எல்லாம் டைரக்டராக இருக்கிருர்கள்.

நண்பர் பாலச்சந்தரின் திறமையை அவரது படங்கள் ஒவ்வொன்றிலும் பார்த்து ரசித்திருக்கிறேன். கலைத் துறையில் ஆசான் போன்று சிறப்பான இடத்தில் இருக்கின்ற ஏவி. எம். அவர்களே தான் பாலச்சந்தரின் ரசிகர் என்று கூறினுர். இதைவிடச் சிறந்த பாராட்டு எதுவும் இருக்க முடியாது. நானும் அவரது ரசிகன்தான்.

பாலச்சந்தரின் திறமையை 'சொல்லத்தான் நினைக்கிறேன்' படத்தில் ஒவ்வொரு பிரேமிலும் பார்த்து ரசித்தேன்.

இந்தப் படத்தை இவர்தான் சிறப்பாக டைரக்ட் செய்ய முடியும் என்று பாலச்சந்தரிடம்இந்தப்பொறுப்பை ஒப்படைத்த மணியன், வித்வான் லட்சுமணனையும் பாராட்டுகிறேன்.

இவ்வாறு வீரப்பன் கூறினுர்.

விழாவிற்குத் தலைமை வகித்த பட அதிபர் ஏவி. மெய்யப்பன் பேசும்போது கூறியதாவது:—

'சொல்லத்தான் நினைக்கிறேன்' படத்தின் நாயகரே டைரக்டர் பாலச்சந்தர்தான் அவரது டைரக்ஷனிலேஎனக்கு தனியானதொரு கவர்ச்சி, நான் அவரது ரசிகன். வர்ணத்தைக் குழைத்து ஓவியம் வரைவதுபோல் முழுத் திறமையையும் பயன்படுத்தி அழகான ஓவியமாக இந்தப் படத்தை உருவாக்கியிருந்தார்.

அன்று சாதாரண நடிகர்களாக இருந்தவர்களைக் கொண்டு வெற்றிப்படமாக எடுத்திருக்கிருர்.

பாலச்சந்தர் பலகாலம் வாழ வேண்டும். அதிகப் படங்களுக்கு ஒத்துக்கொண்டு உடல்நலம் பாதிக்கும்படி செய்து கொள்ளக்கூடாது.

டைரக்டர் பஞ்சம்

தமிழ் நாட்டில் டைரக்டர் பஞ்சம் என்பதால் இதனைக் கூறுகிறேன்.

சென்ற ஆண்டு 55 படங்கள் வெளிவந்தன, 10 படம் வெற்றியடைந்தது. பாக்கி படங்கள் தோல்வியடைந்தன.

கமலஹாசனை குழந்தை நட்சத்திரமாக முதன்முறையாக நான் அறிமுகப்படுத்தினேன். அவரைச் சிறந்த கட்சி வில்லனாக பாலச்சந்தர் அறிமுகப்படுத்தியதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டைரக்டர் பாலச்சந்தர் டாக்டர்

நடிகர் ஜெமினி கணேசன் பேசும்போது கூறியதாவது;-

காசு பணம் சேர்ப்பதற்கென்ருல் ஜனரஞ்சகமாகப் படம் தயாரிக்கலாம். ஆனுல், டைரக்டர் பாலச்சந்தர் ஒவ்வொரு முறையும் சோதனை செய்கிருர். மக்களின் ரசிகத் தன்மையை மாற்ற அவர் வைத்தியம் செய்கிருர்.

மக்களின் ரசிகத் தன்மை மாறினுல் ஒழிய நல்ல படங்கள் வரவேண்டும், தங்கப் பதக்கம் வாங்க வேண்டுமென்று கூற முடியாது. நம் மக்களின் ரசிகத்தன்மை இப்படியே இருந்தால் தங்க மெடல் மட்டுமல்ல, வாழை மடல்கூட வாங்க முடியாது.

மக்களின் ரசிகத் தன்மையை மாற்ற உயிரைப் பணயம் வைத்து டைரக்டர் பாலச்சந்தர் பல சோதனைகளைச் செய்கிருர்.

பாம்பு கடித்துவிட்டால் அந்த இடத்தைக் கடித்து ரத்தத்தை உறிஞ்சி எடுப்பது போல் செய்கிருர். அப்படி உறிஞ்சும்போது வாயில் புண் இருந்தால் என்ன ஆகும்? அப்படிப்பட்ட பயங்கர சோதனையில் தனது உடல் நலத்தையும் கவனியாது ஈடுபட்டுள்ளார்.

ஆகவே, அவர் டைரக்டர் மட்டுமல்ல நல்லதொரு டாக்டருமாவார்.

இதுபோன்ற புதுமையான முயற்சி செய்கின்ற அவரை வாழவிடுங்கள்என்று கேட்டுக் கொள்கிறேன், என்னை விடுங்கள் சினிமா எனக்கு பொழுது போக்கு என்று எப்பொழுதும் சொல்லி வருகிறேன்.

பரிசு எப்படியாவது காக்காய் பிடித்து, ஆளைப்பிடித்து வாங்குவதைப்பற்றி நான் சொல்லவில்லை.

நியாயமாக கிடைக்கவேண்டிய முறையில் கிடைக்கவேண்டும்.

அருமையான படம்ஒன்றை அவர் 'புன்னகை' என்ற பெயரில் டைரக்ட் செய்தார். காந்தி மகான் கருத்துக்களைக் கொண்ட படம். அது சரியாக ஓடவில்லை. பரிசும் கிடைக்கவில்லை. இதைப் பார்க்கின்றபோது சத்தியமேவ ஜெயதே என்பதற்கு முன்னுல் ஒரு 'அ' போட வேண்டும் என்று தோன்றுகிறது. நான் நடித்த படம் என்பதற்காக இதைக் கூறவில்லை.''

இவ்வாறு ஜெமினி கணேசன் கூறினுர்.

வித்வான் லட்சுமணன் நன்றி கூறினுர்.

பாராட்டு இதழ்

படத்தில் நடித்த கலைஞர்களுக்கு சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி கே. என். முதலியார் நன்றி மடலை வழங்கினுர்

ஸ்ரீவித்யா, ஜெயசுதா, கமலஹாசன், எல். ஆர். ஈஸ்வரி, வீரப்பன், பூர்ணம் விஸவநாதன், வாணி ஜெயராம், கிருஷ்ணுராவ், மாஸடர் சேகர், குமுதினி, மக்கள் தொடர்பாளர் நரசிம்மன் மற்றும் பல கலைஞர்கள் நேரில் நன்றி மடலைப் பெற்றுக் கொண்டனர்.

பாலச்சந்தருக்கு உதயம் புரொடக்ஷன்ஸ் சார்பில் வெள்ளிக்கேடயமும், நன்றி மடலும் வழங்கப்பட்டது. எம்ஜிஆர் பிக்சர்ஸ் சார்பில் சந்தன மாலை அணிவிக்கப்பட்டது. ஈராஸ் தியேட்டர் மாணிக்கவாசகத்துக்கு கேடயம் வழங்கப்பட்டது. நடிகையர் சார்பில் ஸ்ரீவித்யா நன்றி கூறினுர். மணியன் வரவேற்ருர். வித்வான் லட்சுமணன் நன்றி கூறினுர்.

பரிசு பெற்ருேர்

'ஐவரில் யார்' என்று 'சொல்லத்தான் நினைக்கிறேன்,விமர்சனப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு சௌக்கார் ஜானகி பரிசு வழங்கினுர்.

முதல் பரிசு: ரூ. ஆயிரம் பாளையங்கோட்டை சி. எம். ஐ. ஸிங்கராஜ். 2-ம் பரிசு: ரூ. 500, மதுரை பெனிக்ஸ் ஜோசப் செயிண்ட். 3-ம் பரிசு: ரூ. 250, முகவை அழகாபுரி அழகப்பன், மதுரை வி. எஸ். விஜயகுமார்.

மற்றும் 10 பேருக்கு ஆறுதல் பரிசாக தலா ரூ 100 வழங்கப்பட்டது.

பரிசுப் போட்டியில் ஸ்ரீவித்யா நடிப்பையும் அவர் நடித்த பாத்திரத்தையும் பாராட்டி எழுதியவருக்குத் தான், முதல் பரிசு கிடைத்திருந்தது. பெரும்பாலோர் அந்தப் பாத்திரத்தைப் பற்றியே எழுதி பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கது. சுபா, கமலஹாசன், நடித்த பாத்திரங்களைப் பாராட்டியும் சிலர் பரிசு பெற்றனர்.

அறிவழகன் வெற்றி: ஈஸ்வரமூர்த்தி தோல்வி; மேல்சபைதேர்தல்முடிவுகள்

சென்னை, ஏப். 15—தமிழ்நாட்டு மேல்சபைக்கு நடந்த தேர்தல்களில் அறிவழகன் வெற்றி அடைந்தார். ஆசிரியர்கள் போராட்டத் தலைவரான ஈஸ்வரமூர்த்தி தோல்வி அடைந்தார்.

சென்ற சனிக்கிழமையன்று நடந்த மேல்சபை தேர்தல்களின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

சென்னை — செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதியில் நடந்த தேர்தலில் அறிவழகன் வெற்றி பெற்ருர்,

அவர் தற்போது மூன்ருவது தடவையாக மேல்சபை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மொத்த ஓட்டுகள்:	9185
பதிவானவை:	6313
செல்லாதவை	534
அறிவழகன்	3677
ஆதிமூலம்	24
ஏ. லீலாவதி	1901
லீலாவதி	26
வெங்கட்ராமன்	151

பெரியண்ணன்

தர்மபுரி-சேலம்ஸ்தலஸ்தாபனத் தொகுதியில் நடந்த தேர்தலில் பழைய காங்கிரஸ ஆதரவு பெற்ற ஏ. பால சுப்பிரமணியமும், தி.மு. கழகத்தைச் சேர்ந்த வி. ஆர். பெரியண்ணனும் வெற்றி பெற்றனர்.

இந்த தேர்தலில் 11 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அவர்களில் 6-பேர் டிபாசிட் இழந்தனர்.

வெற்றி பெற்றவர்களில் ஒருவரான வி.ஆர். பெரியண்ணன் ஏற்கனவே எம். எல். ஏ. வாக பதவி வகித்தவர்.

தங்கபாண்டியன்

ராமநாதபுரம் ஸ்தல ஸ்தாபனத் தொகுதியில் நடந்த தேர்தலில் வி. தங்க பாண்டியனும் (தி. மு. க.), ராமகிருஷ்ண தேவரும் (பழைய காங்கிரஸ்) தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

காரிபட்டி பஞ்சாயத்து யூனியன் தலைவரான தங்க பாண்டியன், இரண்டாவது தடவையாக மேல் சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர். வெற்றி பெற்றவர்களின் மற்ருெருவரான ராம் கிருஷ்ண தேவர், ஆர். எஸ. மங்கலம் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருக்கிருர்.

இந்த தேர்தல்களில் 8 பேர் போட்டியிட்டனர்.

மதுரை — ராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதியில் நடந்த தேர்தலில் பி. ஆர். தாமஸ் வெற்றி பெற்ருர். இந்த தேர்தலில் 11 பேர் போட்டியிட்டனர்.

ஜி. ஆர். தாமோதரன்

தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதியில் கடந்த தேர்தலில் கோவை பி. எஸ். ஜி. நிலைய டைரக்டரான பேராசிரியர் ஜி. ஆர். தாமோதரன் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆசிரியர்கள் போராட்டத் தலைவரான ஈஸ்வரமூர்த்தி உள்பட 10 வேட்பாளர்களை அவர் தோற்கடித்தார்.

இறுதி தடவையாக ஓட்டுகள் எண்ணப்பட்டபோது, பல்வேறு வேட்பாளர்களுக்கு கிடைத்த ஓட்டுகள் விவரம் பின்வருமாறு;—

ஜி. ஆர். தாமோதரன்	7184
ஜி. ஆர். மாரியப்பன்	4541
வி. ஈஸ்வரமூர்த்தி	1232

கோ. சி. மணி

தஞ்சாவூர் ஸ்தல ஸ்தாபனத் தொகுதியில் நடந்த தேர்தலில் கோ. சி. மணி (திமுக) என்.சுந்தரேசதேவர் (பழைய காங்கிரஸ்)ஆகியோர் வெற்றி பெற்றனர். இந்த இருவரும் ஏற்கனவே எம். எல்.சி. பதவி வகித்து வருகிறவர்கள்.

ஓட்டு விவரம் பின்வருமாறு:—

கோ. சி. மணி (திமுக)	1,069
சுந்தரேச தேவர் (ப. காங்கிரஸ்)	802
மாசிலாமணி (கம்யூனிஸ்டு)	339
எஸ். பாலசுப்ரமணியம்	9
செல்லாத ஓட்டுகள்	77

தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதியில் நடந்த தேர்தலில் ஜி. சாமிநாதன் வெற்றிபெற்ருர். அவர் ஏற்கனவே எம்.எல்.சி. யாக பதவி வகித்து வருகின்றவர்.

ஓட்டு விவரம் பின்வருமாறு:—

ஜி. சாமிநாதன்	4,582
ஆர். பண்டரிநாதன்	3,362
எம். வி; கிருஷ்ணமூர்த்தி	83

கடைசி வேட்பாளர் டிபாசிட் இழந்தார்.

ராஜ்ய சபை தி. மு. க. தலைவர்

சென்னை, ஏப். 15—12 உறுப்பினர்களைக் கொண்ட ராஜ்யசபை தி. மு. கழகத்தின் தலைவராக டி. கே. சீனிவாசன் நேற்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் கருணுநிதி தலைமையில் நடந்த ராஜ்ய சபை தி. மு. கழகத்தின் கூட்டத்தில் இந்தத் தேர்தல் நடந்தது.

கட்சியின் துணைத் தலைவராக எஸ. எஸ. மாரிசாமியும் கட்சிக் கொறடாவாக அப்துல் காதரும். செயலாளராக எம். கமலநாதனும், பொருளாளராக வி. பி. சாமிநாதனும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

இவர்கள் அனைவரும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

காவிரி நீர் பங்கீடு: புதுவை கவர்னருக்கு தந்தி

காரைக்கால், ஏப். 15— கடைமடை பகுதியில் உள்ள காரைக்கால் நீர்பாசன பகுதிகளின் நலன்கள் பாதுகாக்க புதுவை அரசு அவசியம் காவிரி நீர் பங்கீடு பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளவேண்டுமென்று கோரி, காரைக்கால் பகுதி கம்யூனிஸ்ட் கட்சி பொதுக் காரியதரிசி என். ஜி. ராஜன் புதுவை கவர்னருக்கு தந்தி அனுப்பியுள்ளார்.

நூல் வினியோகத்தில் ஊழலா?

மத்திய அமைச்சரின் தவருன பிரசாரம்: மந்திரி மாதவன் தகவல்

சென்னை, ஏப். 15—மத்திய அமைச்சர் ஒருவர் சின்னுளப்பட்டி நெசவாளர்களுக்கு நூல் கார்டு வழங்குவதில் முறைகேடு ஏற்பட்டதாக தவருகப் பிரச்சாரம் செய்திருப்பதாக தொழிலமைச்சர் மாதவன் இன்று சட்டசபையில் தெரிவித்தார்.

சின்னுளப்பட்டிநெசவாளர்களுக்கு 7,090 கார்டுகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அங்குள்ள 24.417 மக்கள் தொகையில் 36,566 பேர் நெசவுத் தொழிலைச் சார்ந்து உள்ளதாகவும் டென்னிஸ் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் அமைச்சர் கூறினுர்.

நூல் விநியோகத்துக்கு சர்வ கட்சிக் குழு போடப்பட்டிருப்பதாகவும் அந்தக் குழுவின் ஆலோசனையின் பேரில் நூல் பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினுர்.

இது தொடர்பாக கேட்கப்பட்ட கேள்வியும் அமைச்சரின் பதிலும் வருமாறு:—

நாச்சியப்பன் (திமுக):— சர்வகட்சி சார்பில் கார்டு விநியோகம் செய்யப்பட்டிருந்தும், மாஸ்டர் வீவர்கள் தவருகப் பிரசாரம் செய்வது அரசுக்குத் தெரியுமா?

அமைச்சர்:— மாஸ்டர் வீவர்கள் செய்தாலும் பரவாயில்லை. பொறுப்புள்ள மத்திய அமைச்சர் ஒருவரே தவருன பிரசாரம் செய்தார். இது குறித்து நான் அவரிடம் தொடர்பு கொண்டேன். ஆனுல் இதுவரை பதில் இல்லை.

தங்கமணி;— இது வரை எடுத்துக் கொண்ட கணக்குகள் தவறு என்றும், ஆகையால் புதிய கணக்குகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிகிறது. அந்த எண்ணிக்கை எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

அமைச்சர்: இதுவரை எடுக்கப்பட்ட கணக்குப்படி தவறு இருப்பதாக, தகவல்கள் வந்திருக்கின்றன. ஆகையால் தான், சர்வீஸ் கூட்டுறவு சொசைட்டிகளிடம் நூல் விநியோகப் பொறுப்பை ஒப்படைக்கலாம் என்று யோசித்து வருகிருேம்.

கருணுநிதி ஆணையிட்டால்

உயிரை விடத் தயார்: சத்தியவாணி முத்து ஆவேசப் பேச்சு

சென்னை, ஏப். 15— அர்ச்சகர் சட்டத்தை நிறைவேற்ற கருணுநிதி ஆணையிட்டால் உயிரையும் அர்ப்பணிக்கத் தயார் என்று அரிஜன நலத்துறை அமைச்சர் சத்தியவாணி முத்து கூறினுர்.

சென்னையில் அம்பேத்கார் சிலையை திறந்து வைத்து சத்தியவாணிமுத்து பேசியதாவது:—

இந்தக் கல்லூரிக்கு நான் நிதி திரட்டச் சென்றபோது சில எம். எல். ஏ.க்கள் வடநாட்டில் படித்த அம்பேத்கார் பெயர் எதற்கு? எனது பெயரை வைப்பது தானே என்று கேட்டார்கள். ஜாதியை ஒழிக்க இந்து மதத்தை ஒழிக்க வேண்டும் என்று சொன்ன அம்பேத்காரின் பெயரையே வைப்பது என்று தீர்மானித்தோம்,

இந்த வகையில் தென்னுட்டில் பெரியார் அண்ணு—கலைஞர் வழியில் அம்பேத்கார் இருந்துக்கொண்டிருந்தார்.

காங்கிரஸ்காரர்கள் அவரை எதிரியாகக் கருதினுர்கள். கோவிலில் அர்ச்சகர்களாக அரிஜனங்கள் வரமுடியாது என்று காந்தியார் சொன்னுர். அதனுல், ''காந்தியார் ஜாக்கிரதை'' என்று ஒரு புத்தகத்தையே அம்பேத்கார் எழுதியிருக்கிருர்.

அரிஜனங்கள் அர்ச்சகராக வரசட்டம் கொண்டுவர நேரு ஒத்துக்கொண்டார். ஆனுல் அப்போது ஜனுதிபதியாக இருந்த ராஜேந்திர பிரசாத் அதில் கையெழுத்திட மறுத்தார்.

நேருவின் திருக்குமரியான இந்திரா இதனை ஏற்றுக் கொள்வார் என்று நம்புகிறேன்.

முதலில் அறிவூட்டுங்கள்; பிறகு கிளர்ச்சி செய்யுங்கள் என்று அம்பேத்கார் சொன்னுர். அந்த வகையில் கலைஞர் ஆணையிட்டால் உயிரையும் அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிருேம்.

வடநாட்டினர் பார்ப்பனர்களுக்கு அடிமை, தென்னுட்டினர் பகுத்தறிவுக்கு அடிமை.

இந்தியா முழுமைக்கும் ஒரே சட்டம் ஒரே ஆட்சி இருக்க முடியாது.

நாம் வாழ்வோம் இந்து மதத்தினராக அல்ல.

அர்ச்சகராகவும் வருவோம் என்று சத்தியவாணிமுத்து கூறினுர்.

குளிர்பானம் சாப்பிட்ட

125 பேர் ஆஸ்பத்திரியில்

பம்பாய், ஏப். 15—பம்பாயில் ஒரு கல்யாணத்திற்குப் போயிருந்த சுமார் 125 பேர், குளிர்பானம் உட்கொண்டதைத் தொடர்ந்து வாந்தி எடுத்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

கருணுநிதி தாக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டார். இதைச் சில பத்திரிகைகள்.'கலைஞர் ஆணையிட்டால்' என்பதை எடுத்து விட்டு; ''கிளர்ச்சிக்கு சத்தியவாணி முத்து தயார்'' என்று பேசியதாக செய்தி போடுவார்கள். இந்த அளவுக்கு பத்திரிகைகளின் தரம் குறைந்து வருகின்ற நேரத்தில், நாம் அம்பேத்காருக்குப் பெருமை செய்வது கூட அவைகளுக்கு சலிப்பாக இருக்கும். இவ்வளவு பெரிய கூட்டத்தில் ஒரு பன்றி ஓடினுல், ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டதை விடுத்து, பன்றி ஓடியது என்று பெரிதாகச் செய்தி போடுவார்கள்.

கல்லூரிக்கு சுற்றுச் சுவர்

இங்கு திரட்டப்பட்ட பணத்தில் 80. ஆயிரம் ரூபாய் மிச்சமிருப்பதாகவும் அதை வைத்துக் கொண்டு இதற்கு சுற்றுச் சுவர் கட்டவேண்டும் என்றும் குசேலர் குறிப்பிட்டார். சாதம் போட்டவர்கள் சாம்பார் ஊற்ருமல் இருக்கமாட்டார்கள். அதுபோல் சுற்றுச் சுவர் நிச்சயமாக அமைக்கப்படும்.

தமிழகம் சாதனை

காந்தியடிகளின் லட்சியப் பயணத்தை நிறைவேற்றுவதில் மற்ற மாநிலங்களை விட, தமிழகம் புரிகின்ற சாதனை குறிப்பிடத்தக்கதாகும்.

1965-66-ம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சி அரிஜனத் துறைக்குச் செலவிட்ட தொகை 5 கோடியே 38 லட்சம் ரூபாயாகும்.

இன்று தாழ்த்தப்பட்டோர் துறையை தனியாகப் பிரித்த பிறகு, அரிஜனத் துறைக்கு மட்டும் செலவிடும் தொகை 10 கோடியே 65 லட்சம் ரூபாயாகும்.

1966-67-ல் 10 லட்சத்து 41 ஆயிரத்து 238 தாழ்த்தப்பட்ட மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தனர்.

1972-73-ல் 14 லட்சத்து 21 ஆயிரத்து 786 தாழ்த்தப்பட்ட மாணவர்கள் படித்தார்கள்.

இது ஒரு அருஞ்சாதனையாகும்.

1967-ல் தமிழ்நாட்டில் மொத்தம் 388 தாழ்த்தப்பட்ட மாணவர்கள் விடுதிகள் இருந்தன. கடந்த 5 ஆண்டுகளில் இது 529 ஆக உயர்ந்திருக்கிறது.

இப்படிப் பல துறைகளிலும் தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றத்தில் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது.

ஆனுல் இன்று சிலர் அம்பேத்காரின் பெயரை மட்டும் பயன்படுத்திக்கொண்டு வருகிருர்கள். அவரது பெயரை வைத்து ஏமாற்றலாம் என்பதைத் தவிர இதற்கு வேறு நோக்கமில்லை.

நாம் எதிர்க் கட்சியாக இருந்த போதே அம்பேத்காரின் புகழை பட்டி தொட்டி யெல்லாம் பரப்பியிருக்கிருேம். விளம்பரம் பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு இதை நாம் செய்யவில்லை.

தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றமாகட்டும் — மத மாச்சரியப் பிரச்சினைகளாகட்டும்—மாநில சுயாட்சித் தத்துவமாகட்டும், நாம் அம்பேத்காரின் கொள்கையிலிருந்து ஆதாரம் காட்டுகிருேம். இந்த அளவுக்கு கற்பகதருவாக அவரது கொள்கைகள் இருந்து வருகின்றன.

இவ்வாறு கருணுநிதி பேசினுர்.

குளிக்கும் திருவிழா: கங்கையில் துணை ஜனுதிபதி குளித்தார்

ஹரித்துவார், ஏப். 15— ஹரித்துவார் நகரில் நடந்த குளிக்கும் திருவிழாவையொட்டி துணை ஜனுதிபதி பதக், நேற்று கங்கை ஆற்றில் 2 தடவை குளித்தார்.

லட்சக் கணக்கான மக்கள் குளித்த ஹர்கீபோரி என்ற இடத்தில் குளிக்க அவர் மறுத்துவிட்டார். அங்கு அவர் குளிக்கச் சென்ருல், பக்தர்களுக்கு தொந்தரவு ஏற்படும் என்று அவர் தெரிவித்தார்.

அதற்குப் பதிலாக சுற்றுலா மாளிகைக்குப் பின்புறம் ஓடுகிற கங்கை ஆற்றில் அவர் 2 தடவை குளித்தார்.

கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் சுமார் 40 லட்சம் பக்தர்கள் ஹர்கீபோரி என்ற இடத்தில் கங்கை ஆற்றில்புனித நீராடினுர்கள்.

மனோகரன் கடும் தாக்கு

"சந்தர்ப்பவாதத்திற்கு காமராஜ்; சாகசத்திற்கு பிரதமர் இந்திரா"

சென்னை, ஏப். 15—"சந்தர்ப்பவாதத்திற்கு காமராஜரும், சாகசத்திற்குப் பிரதமர் இந்திராவும் முன்னோடிகளாக இருக்கிறார்கள்" என்று அ. தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சில் மனோகரன் கூறினர்.

இந்திராவுக்கும் காமராஜருக்கும் உள்ள உறவு 'எச்சில் உறவு' என்றும் மனோகரன் குறிப்பிட்டுள்ளார்.

இரு காங்கிரஸ் இணைப்பு முயற்சி குறித்து மனோகரன் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:—

ஸ்தாபனக் காங்கிரசின் செயற்குழு கூட்டம் நடந்து முடிந்துவிட்டது. இந்தக் கட்சியின் தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். கடந்த காலங்கள் அலசி ஆராயப்பட்டிருக்கின்றன. கடுமையான விமர்சனங்களுக்கு கருமவீரர் காமராஜர் ஆளாக்கப்பட்டார்.

அவரது சந்தர்ப்பவாத அரசியலை அனைவரும் சாடினர், கட்சிக்கு, அப்படி ஒன்று முழுமையாக இருந்தால்—அவரால் ஏற்பட்ட கெடுதல்கள் சுட்டிக் காட்டப்பட்டன,

இந்திரா காங்கிரசோடு எவ்வகைப் பிணைப்பும் இருக்கக்கூடாது—முடியாது என்று மூத்த தலைவர்கள் அனைவரும் ஒருமித்த குரல் எழுப்பியிருக்கின்றனர்.

உத்தரப் பிரதேசத்தில், இந்திராவிற்கு காமராஜர் கருவியாகப் பயன்பட்டார். காமராஜரைப் பயன்படுத்தி, காமராஜரைச் சார்ந்த ஸ்தாபனகாங்கிரஸைவேரும்வேரடி மண்ணோடும் சாய்த்துவிட்ட ராஜதந்திரத்திற்கு இந்திரா உரிமை கொண்டாடமுடியும்.

இடுப்பெலும்பு முறிப்பு

தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரியிலும் இரு காங்கிரஸ் கட்சிகளும் இணைந்து செயல்பட, காமராஜரின் வற்புறுத்தலின்பேரில் அலை இந்தி ஸ்தாபன காங்கிரஸ் ஒப்புதல் தந்தது! அந்த குறு மாநில அளவு இணைப்புகூட ஸ்தாபனக் காங்கிரசின் இடுப்பெலும்பை முறிக்கப் பயன்பட்டதே தவிர, காப்பாற்றத் துணை நிற்கவில்லை.

இந்திரா காந்தி புதுவையிலும், காரையிலும் பேசிய பேச்சுக்களில் ஸ்தாபனக் காங்கிரசிற்கு ஓட்டு போடு எனக் கூறவில்லை.

"தன் கட்சிக்கு ஓட்டு போடு என்று கேட்டாரா?" எனக் கேட்[illegible]டும் தேவையில்லை; அ[illegible]து மேடைத் தோற்றமே தன் கட்சிக்கு ஓட்டுப் போடுங்கள் என்பதன் அறிகுறிதான்!

விளைவை, தேர்தல் முடிவு தெரிவித்தது. இந்திரா, காமராஜரை முறியடித்தார்.

செயற்கை உறவு

இணைப்பு இதயபூர்வமான ஒன்றல்ல. அண்ணா தி. மு. க. வை வீழ்த்துவதற்காக ஏற்படுத்திக்கொண்ட செயற்கை உறவு.

உறவு, உள்ளத்தோடு பின்னிப் பிணைந்திருந்தால் அது நீடிக்கும், மாறாக உதட்டோடு தொடர்பு கொண்டிருக்குமானால், எச்சில் துப்பும் போது அத்தோடு அந்த உறவும் சென்றுவிடும்.

இந்திரா, காமராஜர் கட்சிகளின் உறவு இரண்டாவது வகையைச் சார்ந்தது.

காமராஜரை கட்சியை விட்டு வெளியேற்றுவது என்ற முடிவிற்கு ஸ்தாபன காங்கிரசின் தலைமை தயாராகிவிட்டது.

இந்திரா காந்தியை காங்கிரஸ் கட்சியிலிருந்து தூக்கியெறிந்திட காரணமாக இருந்த காமராஜருக்கு அபயம் அளிக்க இந்திரா தமது மனதைப் பக்குவபடுத்திக்கொண்டிருப்பதுதான் கேள்வி.

இடையே இரண்டு காங்கிரஸ் கட்சிகளிலும் உள் போராட்டங்கள் ஆரம்பித்து விட்டன.

தமிழகத்தில், இந்திரா காங்கிரசின் இளைஞர் அணி போர்க்கொடியை தூக்கிவிட்டது.

"காமராஜரை எக்காரணம் கொண்டும் தங்களது கட்சியில் சேர்க்கக்கூடாது: அதன் மூலம் வருகின்ற லாபத்தை விட நட்டத்தை விழுங்கிடத் தயார்": இளைஞர் அணியின் போர்க்குரல்.

"தாய்க் கழகத்தையே இயக்கிடும் ஆற்றல் எங்களுக்குண்டு"—என்பதை நிரூபித்துக்காட்டியுள்ளது காங்கிரஸ் இளைஞர் அணி.

கேரளாவும், மேற்கு வங்காளமும் இதற்குச் சான்றுகள்.

தமிழகம் மட்டும் இதில் பின் தங்குவானேன்? அவர்கள் கேட்கிறார்கள்?

இளைஞர் காங்கிரசின் போராட்டத்தில் கொள்கை வெறி தெரிகிறது. இதயபூர்வமாக அவர்கள் சமதர்ம சமுதாயம் மலர விழைகிறார்கள்.

பெரு முதலாளிகளை நிலத்திமிங்கலங்களை, ஆலை அரசர்களை அருகே வைத்துக்கொண்டிருக்கும் காமராஜரையும் அவர் கட்சியையும் இணைத்துக் கொள்வதன்மூலம், இந்திரா காங்கிரசின் கதவுகள், இத்தகைய சமூக விரோதிகளுக்கு, தேசத் துரோகிகளுக்கு திறந்துவிடப் படக்கூடும் என்ற நியாயமான அச்சம் அவர்களுக்கிருக்கிறது!

விரும்பத்தகாத சக்திகளின் ஊடுருவலுக்கு இந்தஇணைப்பு வழிவகை செய்துவிடும் என்று பயப்படுகிறார்கள்.

இளைஞர்கள் எப்போதுமே துடிப்புணர்ச்சி கொண்டவர்கள். தத்துவ நெறியிலும் கொள்கை வெறியிலும் குறியாக இருப்பவர்கள்.

சாகசக்காரர்கள்

சாகசக்காரர்கள், சந்தர்ப்பவாதிகள், சாணக்கியர்கள், சண்டாளர்கள்—இவர்களை இனங்கண்டு கொள்வதில் இளைஞர்கள் வல்லவர்கள்.

இதே இந்திரா காந்தியைப் பற்றி, எவ்வளவு இழிவான மொழியில் காமராசர் பகிரங்கமாகவும், மறைமுகமாகவும் தாக்கிப் பேசியிருக்கிறார் என்பதை புண்பட்டுப் போன இளைஞர் காங்கிரஸ் நண்பர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

பாண்டியிலும், கோவையிலும் நடைபெற்ற தேர்தல்களில் இந்த இரு அமைப்புகளுக்கிடையே இழையோடிக் கொண்டிருந்த வெறுப்புணர்ச்சிகள் வெளிப்படையாகவே தெரிய ஆரம்பித்தன.

இரண்டு அமைப்புகளிலும் கீறல்கள் விழுந்து விட்டன.

இரண்டு காங்கிரஸ் கட்சிகளிலும் இருக்கின்ற இளைஞர்கள் குமுறுகிறார்கள். தங்களுக்கென்றுள்ள கோணங்களின் வழியாக பிரச்சனைகளை அணுகுகிறார்கள்.

சந்தர்ப்பவாதி

சந்தர்ப்பவாதத்திற்கு காமராசரும், சாகசத்திற்கு [illegible]திராவும் இன்றைக்கு முன்னோடிகளாக இருக்கிறார்கள். மற்றவைகளைப் பின்னால் எழுதுகிறேன்.

பாலில் கலப்படம் செய்தவருக்கு கடுங்காவல்

பட்டுக்கோட்டை, ஏப். 15—பாலில் அதிக அளவில் தண்ணீர் கலந்துவிற்ற பால் வியாபாரிக்கு 2 மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

பட்டுக்கோட்டை பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்தவர், நாகராஜன், பால் வியாபாரம் செய்து வந்தார்.

அவர் பாலில் அதிக அளவில் தண்ணீர் கலந்து விற்றாம். அவர் மீது பட்டுக்கோட்டை நகரசபை சுகாதார அதிகாரி பாஞ்சாலன் வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை பட்டுக்கோட்டை சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட் என். ராமசாமி விசாரித்து பால் வியாபாரி நாகராஜனுக்கு 2 மாதம் கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்புக் கூறினர்.

வேதாரணியம் பேரூராட்சி வைரவிழா

தஞ்சை ஏப். 15—தஞ்சை மாவட்டம் வேதாரணியம் பேரூராட்சி ஏற்பட்டு 75 ஆண்டாகிறது! 1886ல் தொடங்கப்பட்ட இந்த பஞ்சாயத்து போர்டுக்கு இது வரை 12 பேர் தலைவர்களாக இருந்[illegible]ள்ளனர்! 13வது தலைவர[illegible]ற்போது சிவ—கனக சுந்தரம் (திமுக) இருந்துவருகிறார். இதன் வைர விழா இந்த மாத கடைசி வாரத்தில் நடைபெற இருக்கிறது. இ[illegible] விழாவில் முதல் அமைச்சர் கருணாநிதி மன்னை நாராயணசாமி, அன்பில் தர்மலிங்கம் முதலியவர்கள் கலந்து கொள்கின்றனர்.

வைர விழா நினைவாக பேரூராட்சி ரூ. 50 ஆயிரம் செலவில் புதிய கட்டிடம் கட்ட இருக்கிறது. இதன் அடிக்கல் நாட்டு விழாவை முதல் அமைச்சர் நடத்தி வைப்பார். ஒரு லட்சத்து 20ஆயிரம் ரூபாய் செலவில் தோப்புத்துறை, மறையாயதல்லூர், அகஸ்தியம் பள்ளி முதலியஊர்களில்கட்டி முடிக்கப்பட்ட குடிநீர் தொட்டிகளை முதல் அமைச்சர் திறந்து வைப்பார். இதற்கான ஏற்பாடுகளை பேரூராட்சி தலைவர் சிவ—கனக சுந்தரம் தீவிரமாக செய்து வருகிறார்.

சென்னை மார்க்கெட்

சென்னை, ஏப். 15—

தங்கம்

(24 காரட்) சுத்த தங்கம் 10 கிராம் ரூ. 534 00
(22 காரட்) சில்லரை 1 கிராம் ரூ. 50 75
(14 காரட்) சில்லரை 1 கிராம் திரவில்லை

வெள்ளி

பார் வெள்ளி (1 கி. கி.) ரூ. 1100 00
உள்ளூர் வெள்ளி ரூ. 1800 00
(வெள்ளி 10 கிராம்) ரூ. 11 10

மணிலாப்பயறு

மாரிக்கால பட்டாணி 80 கி. கி. ரூ. 274 00

மணிலா எண்[illegible]

மொத்த விலை ரூ. 755 00
சில்லரை விலை ரூ. 8 00

விளக்கெண்ணெய்

(100 கி. கி.) சென்னை கிடங்குடெலிவரிதிருப்பத்தூர் மொத்த விலை ரூ. 640 00
சேலம் தாமரை அன்னம் மார்க் (16 05 கி. கி.) ரூ. 95 00

தேங்காய் எண்ணெய்

(16.06 கி. கி.) டின் எம். எஸ். மார்க் ரூ. 200 00

நல்லெண்ணெய்

17 கி. கொண்ட டின் 1-க்கு (அக்மார்க் குருபரன் மார்க்) ரூ. 151 00
விற்பனை வரி தனி
சில்லரை (கிலோ 1-க்கு) ரூ. 9 50

கடலைப்பிண்ணாக்கு

கி. கி. கொ[illegible]

முட்டைக்கு 70 எக்ஸ்பெல்லர் ரூ. 75 00

சர்க்கரை

பகிரங்க மார்க்கெட் லேவி 100 கி. கி. ரூ. 378 00
முதல் ரூ. 380 00

கப்பலுக்கு எச்சரிக்கை விடுக்கும் புயல் வருகிறது: கண்ணதாசன் தகவல்

சென்னை, ஏப். 15—"நாட்டில் புயல் ஒன்று வருகிறது. அதனால் நமது பொருளாதாரக் கப்பல் எச்சரிக்கப்படுகிறது" என்று கவிஞர் கண்ணதாசன் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து புத்தாண்டையொட்டி கண்ணதாசன் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:—

என் இனிய நண்பர்களே!

ஆரவாரத்தோடு இந்தியக் குடியரசு தோன்றி 25 ஆண்டுகளாகிவிட்டன.

கை கால்களில் இருந்த விலங்குகள் அகன்று பாரத சமுதாயம் பறக்கத் தொடங்கியதற்கு வெள்ளி விழா ஆண்டு இன்று தொங்கும் புத்தாண்டு.

நாகரிகத்தின் உச்சாணிக் கொம்பில் நிற்கும் மேலை நாடுகள்கூட வழங்காத உரிமைகளை வழங்கியது காங்கிரஸ் மகாசபை.

ஒவ்வொரு கட்சியும் கொடி வைத்துக் கொள்ள அனுமதித்த ஒரே நாடு உலகத்திலேயே இந்தியாதான்.

ஆட்சியில் இருப்போரை நாக்கில் நரம்பின்றி வெறும் வேஷதாரிகள் கூடப் பேச அனுமதித்த நாடு இந்தியாதான்.

பபூனுக்கு உரிமை

கூத்தாடிக் கொண்டிருந்த 'பபூன்' கூட ஒரு கட்சி நடத்தும்படி சலுகை வழங்கியது இந்தி[illegible]னநாயகம்தான்.

தன்[illegible]ய கொல்லக் கூடிய கத்தியை தைரியத்தோடு எதிரிகளுக்கு வழங்கியதும் காங்கிரஸ் மகாசபைதான்.

அமெரிக்க ஜனநாயகத்தில் இவ்வளவு பெரிய மைதானம் இல்லை.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பிரிட்டிஷ் ஜனநாயகத்தில் இல்லாத சலுகைகளும் இங்கேதான் உண்டு.

ஜனநாயகத்தின் தாயகமான கிரேக்க நாடு, அதை இழந்து நிற்கும் நேரத்தில் இந்திய ஜனநாயகம் கொடி கட்டிப் பறக்கிறது.

மாசுபடாத மத உரிமைகள் இங்கேதான் உண்டு.

இனங்கள் அனைத்தும் ஒரே பார்வையில் இங்கே தான் பார்க்கப்படுகின்றன.

வேதகாலம் தொடங்கி இந்த விஞ்ஞான காலம்வரை நல்லோரும், மேலோருமே நாட்டை வாழவைத்தனர்.

அவர்களுக்கு நன்றிசொல்ல வேண்டியநாள் இந்தப் புத்தாண்டுப் பொன்னாள்.

மனு, மாந்தாதா காலங்கள், வால்மீகி—வியாசர் காலங்கள், வள்ளுவன்—கம்பன் காலங்கள், அக்பர்—அசோகன் காலங்கள், காந்தி, திலகர், காலங்கள், நேரு—ராஜா[illegible] காலங்கள், காமராஜர்—[illegible]ந்திரா காலங்கள்—

பாரத பூமியில் பதிந்திருக்கும் அடிச்சுவடிகள் நமது பண்பாடுகளைப் பேசுகின்றன.

நாடு அழியாமலிருக்க நல்லாட்சி கோரும் மக்கள் இந்த ஆண்டில் ஏற்றுக்கொள்ள வேண்டிய சபதம். 'காங்கிரசைக் காப்போம்' என்பதே.

பொம்மலாட்டக்காரர்களுக்குப் புது வரவு கூறாமல் புகழ்மிக்க தலைவர்களைப் பூஜித்து வாழச் சபதம் ஏற்றுக்கொள்ளுங்கள்.

புயல் வருகிறது

நாட்டில் புயல் ஒன்று எதிர்பார்க்கப்படுகிறது.

நமது பொருளாதாரக் கப்பல் எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

அந்தப் புயல் நகருக்குள் வராமல் கடலிலேயே வேறு திசையில் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அப்படியே நகருக்குள் அது புகுமானால், அதை சமாளிக்க நம்மால் முடியும்.

அதற்கு நமக்குத் தேவை ஒற்றுமை.

அதைச் சமாளிக்கக் கூடியது ஒன்றுபட்ட காங்கிரஸ்.

நல்ல நம்பிக்கையோடு இந்தப் புதிய ஆண்டை வரவேற்று வாழ்த்துங்கள்.

மே[illegible]ண்டவாறு தமது அறிக்கையில் கண்ணதாசன் குறிப்பிட்டிருக்கிறார்.

காந்தி சிலை உடைப்பு: வாலிபர் கைது

ஊட்டி, ஏப். 15—தர்மபுரியில் காந்தி சிலை உடைக்கப்பட்டது சம்பந்தமாக சுப்பிரமணியம் என்கிற கந்தசாமி (வயது 20) கைது செய்யப்பட்டார். இதுபற்றி போலீசார் தொடர்ந்து புலன் விசாரித்து வருகிறார்கள்.

தமிழ்நாடு முஸ்லிம் லீக்

முதல் மாநில மாநாடு: எம். ஜி. ஆர்: பேசுகிறார்

சென்னை, ஏப். 15—தமிழ்நாடு முஸ்லிம் லீகின் முதல் மாநில மாநாடு இந்த மாதம் 21ம் தேதி காலை 10 மணிக்கு சேலத்தில் நடைபெறும்.

அப்துல் பாசித் சாகிப் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எம். ஜி. ஆர்., கம்யூனிஸ்டுக் கட்சித்தலைவர் எம் கல்யாணசுந்தரம் ஆகியோர் சிறப்பு சொற்பொழிவு ஆற்றுகின்றனர்.

ஹாஜி பி. ஏ. எஸ். அப்துல்காதர் கொடியேற்றுகிறார்.

தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலிருந்தும் இந்த மாநாட்டிற்குப் பிரதிநிதிகள் வருவதுடன், கேரளம், மைசூர் மாநில முஸ்லிம் பிரமுகர்களும் மாநாட்டில் கலந்து கொள்வர் என்று, பி. ஏ. எஸ். அப்துல்காதரும், மாநில அமைப்பாளர் கே. பி. செய்குத்தம்பியும் நிருபர்களிடம் தெரிவித்தனர்.

இந்திய யூனியன் முஸ்[illegible] லீக், முஸ்லிம்களின் உண்[illegible]யான பிரதிநிதித்துவம் வாய்ந்த கட்சியல்ல என்று அப்துல்காதர் கூறினர்.

தமிழ்நாடு முஸ்லிம் லீகில் சுமார் 1 லட்சம் பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்[illegible]க்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மாநில மாநாட்டில் தோழமைக் கட்சிகளுடன் தொடர்ந்து கூட்டுச்சேர்ந்து [illegible]ம் நகராடசித் தேர்தல்களில் போட்டியிடுவது உட்பட பல முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவிருக்கின்றன என்று செய்குத்தம்பி கூறினர்.

வந்த போராட்டத்தை விடமாட்டோம்: நெடுஞ்செழியன் பேச்சு

சென்னை, ஏப். 15—போராட்டத்தை நாம் தேடி அலைய மாட்டோம். தேடி வந்த போராட்டத்தைக் கண்டு ஓடி ஒளிய மாட்டோம் என்று கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் உழைப்பாளி என்ற வெளியீட்டு விழாவில் தெரிவித்தார்.

அமைச்சர் நெடுஞ்செழியன் பேசுகையில் கூறியதாவது:—

எந்த மாநிலத்திலும் இல்லாத தொழில் அமைதி தொழிற்சங்க அமைதி இங்கேதான் இருக்கிறது.

இதில் நம் அணுகுமுறை வேறு. மற்றவர்கள் அணுகுமுறை வேறு.

கட்சியை வளர்க்க தொழிற்சங்கமா? தொழிற்சங்கத்தை வளர்க்க கட்சியா என்பது பிரச்னையாக இருக்கிறது.

நாம் தொழிற்சங்கம் வளர கட்சியை உறுதுணையாக்குகிறோம்.

கழகத்தை வளர்க்க தொழிற்சங்கத்தைப் பயன்படுத்தவில்லை. நம் அணுகுமுறை வேறு.

மற்றவர்கள் கட்சியை வளர்க்க தொழிற்சங்கங்களை துணைக்கு வைத்துக்கொள்கிறார்கள்.

கட்சி எங்கே இருக்கிறது என்று துருவிப் பார்த்தால் தொழிற்சங்கப் "பாக்கெட்" இருக்கும் இடங்களில் கட்சி இருக்கும். அது இல்லாத இடத்தில் கட்சியேஇருக்காது.

நாம் போராட்டத்தை தேடி அலைய மாட்டோம். தேடி வந்த போராட்டத்தைக் கண்டு ஓடி ஒளியமாட்டோம். இது நமது இரண்டாவது அணுகுமுறை.

மற்றவர்கள் இந்த ஆண்டு எந்தப் போராட்டம் நடத்தலாம்; அமைதியாக இருக்கிறதே? இ[illegible] மாதம் நடத்தினால்தான் ந[illegible] பிழைப்பு நடக்கும் என்று போராட்டத்தை தேடுவார்கள்.

தனியாக முடியாவிட்டால் மற்ற சங்கங்களுடன் கூடிக் கூடி தேடுவார்கள்.

நம் நோக்கம் தொழில்கள் வளரவேண்டும். வருமானம் உயரவேண்டும். தொழிலாளர் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்பதுதான்.

அதற்கு என்ன என்ன செய்யவேண்டுமோ அதை செய்துவருகிறோம். அதனால் தான் எங்கிருந்து தொழில்கள் வந்தாலும் வரவேற்கிறோம்.

பொதுத்துறை, கூட்டுறவுத் துறை, கூட்டுப் பொதுத் துறை, அதன்பிறகு தனியார் துறை என்ற முறையைப் பின்பற்றி வருகிறோம்.

1967க்கு முன்பு தொழிற்சங்கப் பிரச்னைகளை அதிகாரிகள்தான் தீர்த்து வந்தார்கள்.

67க்குப் பிறகு அமைச்சர்கள் தீர்த்து வைக்கிறார்கள். 67க்குப் பிறகு நம் அணுகுமுறைவேறு. தொழிலாளர் பிரச்னைகளைப் பேசித் தீர்க்க அமைச்சர்கள், முதல்வர் நேரம் காலம் பார்ப்பதில்லை.

கல்கத்தா, பம்பாய், டெல்லியைவிட தொழில் துவங்க தமிழ்நாடு ஏற்ற இடம் என்று பார்த்துவிட்டு வந்தவர்கள் [illegible]சால்கிறார்கள்.

சக்திக்கு ஏற்ற உழைப்பு. உழைப்புக்கு ஏற்ற ஊதியம். தேவைக்கேற்ற வசதி இவை தான் நமது நோக்கம்" என்று நெடுஞ்செழியன் கூறினர்.

யாமினி கிருஷ்ணமூர்த்திக்கு கவுரவ பட்டம்

புதுடெல்லி, ஏப். 15—தமிழ்நா[illegible]டைச் சேர்ந்த உலகப்புகழ்பெற்ற நாட்டியக் கலைஞரான யாமினி கிருஷ்ணமூர்த்திக்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்க திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம் முன்வந்துள்ளது.

இந்த மாதம் 30-ந் தேதியன்று திருப்பதியில் நடக்கவிருக்கும் அந்தப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவின்போது யாமினி கிருஷ்ணமூர்த்திக்கு அந்த கவுரவபட்டம் வழங்கப்படும்.

---

7 எதிர் கட்சிகள் இணைந்தன

புதுடெல்லி, ஏப். 15— சுதந்திரா கட்சி, சரண்சிங்கின் பாரதிய கிராந்தி தளம் (பி. கே. டி.) பிஜு பட்நாயக்கின் உத்கல் காங்கிரஸ், சம்யுக்த சோஷலிஸ்டு கட்சி, முஸ்லிம் மஜ்லிஸ், பாரதிய கேத்திகார் சங்கம், லோக் தந்திரிக்தளம் ஆகிய 7 எதிர்க்கட்சிகள் ஒன்றாக இணைந்து புதிய கட்சியை அமைக்க முடிவு செய்துள்ளன.

டெல்லியில் பிஜு பட்நாயக்கின் இல்லத்தில் சரண் சிங் தலைமையில் இந்த 7 கட்சிகளின் தலைவர்கள் கூடி இவ்வாறு முடிவு எடுத்தனர்.

இவ்விதம் புதிய கட்சி அமைப்பதில் தாங்கள் சேர முடியாது என்று பழைய காங்கிரசும், ஜனசங்கமும் அறிவித்துவிட்டன.

புதிய கட்சி அமைக்கும் 7 கட்சிகளில் சுதந்திரா கட்சியும், சம்யுக்த சோஷலிஸ்டு கட்சியும் அகில இந்திய கட்சிகளாகும்.

உ. பி. முன்னாள் முதல்வர் சரண்சிங் தலைமையிலான பாரதிய கிராந்தி தளம் பிரதானமாக உத்தரப்பிரதேச மாநிலத்தில் வலுவான கட்சியாக உள்ளது.

பிஜு பட்நாயக்கின் உத்கல் காங்கிரஸ் ஒரிசாவில் வலுவான எதிர்க்கட்சியாக உள்ளது.

முஸ்லிம் மஜ்லிஸ் கட்சி உத்தரப்பிரதேசத்தில் செயல்படுவதாகும்.

பாரதிய கேத்திகார் சங்கம் என்னும் கட்சி முன்னாள் மத்திய மந்திரியான ராம் சுபாக்சிங்கினுடைய கட்சியாகும். லோக்தந்திரிக் தளம் என்னும் கட்சி ஜனசங்கத்தில் இருந்து பிரிந்தவரான பால் ராஜ்மதோக்கினுடைய கட்சியாகும்.

நாட்டில் புது காங்கிரஸ் கட்சிக்கு எதிராக வலுவான எதிர்க் கட்சியை அமைப்பதற்காக இந்த 7 கட்சிகளும் இவ்வாறு இணைவதென முடிவு செய்தன.

அடுத்து இந்த 7 கட்சிகளின் தனித்தனியே தங்களுடைய நிர்வாகக்குழுக்களின் கூட்டத்தை நடத்தி புதிய கட்சி அமைக்கும் முடிவுக்கு அங்கீகாரம் அளிப்பர். அடுத்த மாதம் 5-ந் தேதிக்குள்ளாக அங்கீகாரம் அளிக்க இக்கட்சிகள் ஒப்புக்கொண்டுள்ளன.

புதிய கட்சி ஏன்?

அதைத் தொடர்ந்து மே 12ந் தேதியன்று இக்கட்சித் தலைவர்கள் மறுபடி டெல்லியில் கூடி புதிய கட்சியின் விரிவான கொள்கைத் திட்டத்தையும், விதிமுறைகளையும் வகுப்பர். புதிய கட்சிக்கு என்ன பெயர் வைப்பது என்பது பற்றியும் முடிவு செய்வர்.

பரவலான ஊழலினால் மக்கள் அவதிப்படுகின்றனர். விலைவாசி ஏறி வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. உற்பத்தி குறைந்து வறுமைதான் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் பல்வேறு எதிர்க் கட்சிகள் இடையே ஓட்டுக்கள் சிதறுவதால்தான் புது காங்கிரசின் மோசமான ஆட்சி நீடிக்க முடிகிறது.

எனவேதான் புதிய கட்சி அமைக்கப்படுகிறது என்று இந்த 7 கட்சிகளின் தலைவர்களும் அறிவித்துள்ளனர்.

''உத்தரப் பிரதேசத்தில் புது காங்கிரசுக்கு மொத்த ஓட்டுகளில் 32 சதவிகித ஓட்டுகள்தான் கிடைத்தன. எனினும் அக்கட்சி அரசை அமைத்துள்ளது. எதிர்க்கட்சிகள் இடையிலான பிளவுதான் இதற்குக் காரணம்'' என்றும் அக்கட்சித் தலைவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இவ்வித நிலைமையைத் தவிர்க்க, தேசியம், ஜனநாயகம், மதச்சார்பின்மை சமத்துவம் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்ட 7 கட்சிகளும் ஒன்றாக இணைவதாக அவர்கள் கூறினர்.

புதிய கட்சி ஆட்சிக்கு வந்தால்தேர்தலில் ஊழலைஒழிக்க தேர்தல் சட்டங்களை தீவிரமாக மாற்றியமைக்கும். தேர்தல் கமிஷனை முற்றிலுமாக மாற்றியமைக்கும். விலைவாசி உயர்வைத் தடுக்கும். விவசாயத்துக்கு முதலிடம் அளிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

''புதிய கட்சியானது மத்திய—மாநில அரசுகளிடையே அரசியல் பொருளாதார அதிகாரப்பரவல் ஏற்படவும், அதே நேரத்தில் மாநிலங்களுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் இடையே அதிகாரப் பரவல் ஏற்படவும் பாடுபடும்'' என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சரண்சிங் நேற்று நிருபர்களிடையே பேசுகையில் மேற்படி தகவல்களை அறிவித்தார்.

புதிய கட்சியின் கொள்கையில் நம்பிக்கை உள்ள மற்ற கட்சிகளும் தங்களுடைய புதிய கட்சியில் இணைய முன்வரும் என்று சரண்சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பழைய காங்கிரஸ் ஜனசங்கம்

''புதியதாக அமைக்கப்படுகின்ற கட்சி பெடரல் பாணியில் செயல்படவேண்டும். அக்கட்சியில் சேருகின்ற எதிர்க்கட்சிகள் தனித்தன்மை இழக்காமல் தொடர்ந்து செயல்பட்டு வரவேண்டும் என்று பழைய காங்கிரஸ் நிபந்தனை விதித்தது'' என்று சரண்சிங் கூறினர்.

தாங்கள் இதை ஏற்காததால் பழைய காங்கிரஸ் புதிய கட்சியில் சேர முன்வரவில்லை என்றும் சரண்சிங் கூறினர்.

ஜனசங்கத் தலைவரான அத்வானி சரண்சிங்கை நேற்று காலை சந்தித்தார். ஜனசங்கத்துக்குத் தனிக் கொள்கை உள்ளதால் மற்ற எதிர்க்கட்சிகளுடன் இணைய ஜனசங்கம் விரும்பவில்லை என்று சரண்சிங்கிடம் அத்வானி தெரிவித்தார்.

எனினும் பழைய காங்கிரஸ், ஜனசங்கம் ஆகிய இரண்டும் அடிப்படைக் கொள்கைகளில் புதிய கட்சியுடன் ஒத்துழைக்கும் என உறுதி கூறியுள்ளதாகவும் சரண்சிங் தெரிவித்தார்.

இந்திரா நிறுத்தும் வேட்பாளரே அடுத்த ஜனாதிபதி

புதுடெல்லி, ஏப். 15—விரைவில் நடக்கப்போகிற ஜனாதிபதி தேர்தலில் இந்திராவின் தலைமையிலான புது காங்கிரஸ் கட்சி யாரை நிறுத்துகிறதோ அவர் எளிதில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகிவிடுவார். புது காங்கிரஸ் கட்சிக்கு அந்த அளவுக்கு ஓட்டு பலம் உள்ளது.

எனவே இந்தத் தடவை ஜனாதிபதி தேர்தலில் கடந்த தடவை இருந்ததுபோல கடும் போட்டியோ விறுவிறுப்போ இருக்காது.

இப்போதைய ஜனாதிபதி கிரியின் பதவிக்காலம் வருகிற ஆகஸ்ட் 23-ந் தேதியுடன் முடிவடைகிறது. அதற்கு முன்னதாக புதிய ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்துவிடும்.

புதிய ஜனாதிபதி தேர்தலில் புது காங்கிரஸ் கட்சி யாரை நிறுத்துவது என்பதை புது காங்கிரஸ் கட்சி இன்னும் முடிவு செய்யவில்லை. இக்கட்சி அநேகமாக ஜூலை மாத மத்தியில்தான் இது பற்றி முடிவு செய்யும் என்று கருதப்படுகிறது.

கடந்த 1969-ம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தலில் கிரிக்கும் சஞ்சீவரெட்டிக்கும் இடையே கடும் போட்டி ஏற்பட்டு இறுதியில் கிரி மிகக் குறுகிய ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றது நினைவிருக்கலாம்.

ஜனாதிபதிதேர்தலில் யாரை நிறுத்துவது என்பதில்தான் அப்போது ஒன்றுபட்டுஇருந்த காங்கிரஸ் கட்சியில் பெரும் பிளவு ஏற்பட்டது. இதன் விளைவாக காங்கிரஸ் சார்பில் அதிகாரப்பூர்வமாக நிறுத்தப்பட்ட சஞ்சீவரெட்டி தோற்றுப்போனார். காங்கிரஸ் கட்சி பிளவுபட, இந்திரா தலைமையிலான காங்கிரஸ் கட்சியினரும், மற்றும் பல எதிர்க்கட்சிகளும் ஆதரித்த கிரி வெற்றி பெற்றார்.

இந்தியாவின் வரலாற்றிலேயே அதுவரை இல்லாத அளவுக்கு ஜனாதிபதி தேர்தல் மீது மக்கள் பெரும் ஆர்வமும் அக்கறையும் காட்டினர். கிரி, நாடு பூராவிலும் விமான மூலம் சூறாவளி சுற்றுப் பிரயாணம் செய்து தமக்கு ஆதரவு தேடினார்.

ஆனால் இந்தத் தடவை ஜனாதிபதி தேர்தல் அநேகமாக உப்புசப்பற்றதாக இருக்கும் என்றே கருதப்படுகிறது. ஏனெனில் ஜனாதிபதி தேர்தலில் புது காங்கிரஸ் யாரை நிறுத்துகிறதோ அவருக்கு நிச்சயம் 60 சதவிகிதத்துக்கும் குறையாமல் ஓட்டுக்கள் முதல் சுற்று ஓட்டு எண்ணிக்கையிலேயே கிடைத்துவிடும்.

ஜனாதிபதி தேர்தலில் மாநிலங்களின சட்டசபை (கீழ்சபை) உறுப்பினர்களும், பார்லிமெண்ட் உறுப்பினர்களும் ஓட்டளிப்பார்கள்.

ஒவ்வொரு மாநில எம். எல். ஏ.யின் ஓட்டுக்கும், பார்லிமெண்ட் உறுப்பினரின் ஓட்டுக்கும் வெவ்வேறான ''எண்ணிக்கை மதிப்பு'' உண்டு.

நிச்சய வெற்றி

இவர்கள் அனைவருடைய ஓட்டுக்களின் எண்ணிக்கை மதிப்பு மொத்தம் 10,92,654 ஆகும். இதில் மாநில சட்டசபைகளிலும் பார்லிமெண்டிலும் உள்ள புது காங்கிரஸ் உறுப்பினர்களின் ஓட்டு எண்ணிக்கை மதிப்பு 6,68,000-க்கு மேல் உள்ளதாக இப்போது மதிப்பிடப்பட்டுள்ளது. இது 60 சதவிகிதத்துக்கும் அதிகம். தவிர, புது காங்கிரஸ் நிறுத்தும் வேட்பாளரை ஒருசில எதிர்க் கட்சிகளும் ஆதரிக்க முன்வரலாம்.

எனவே ஜனாதிபதி தேர்தலுக்குள் திடீர் அரசியல் மாறுதல்கள்எதுவும் நிகழாதுஎன்று வைத்துக் கொண்டால் புது காங்கிரஸ் கட்சி நிறுத்துகிற வேட்பாளர் நிச்சயமாக வெற்றி பெற்று விடுவார்.

மாநில சட்டசபைகளில் உள்ள மொத்த எம்.எல்.ஏ.க்களின் எண்ணிக்கை 3646. எம். பி.க்களின் எண்ணிக்கை 751. மாநிலங்களில் 2063 புது காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் உள்ளனர். புது காங்கிரஸ் எம். பி.க்களின் எண்ணிக்கை 490.

இன்றைய சினிமா

சென்னை
ராம் — திருடி
நியூ எல்பின்ஸ்டன் — சாஸ்திரம் ஜெயிச்சு மனுஷ்யன்
தொட்டு
ஈராஸ் — மாணிக்கத்தொட்டில்
நேஷனல் — நாகசக்தி

தாம்பரம்
நேஷனல் — தாய்
எம். ஆர். தியேட்டர் — Kashmakash
ஸ்ரீசித்ரா — பிளாக் மெயில்

வில்லிவாக்கம்
ராயல் — தாய்

குரோம்பேட்டை
வெற்றி — வெள்ளிக்கிழமை விரதம்

டி. யூ. சி. எஸ். தொழிலாளர் சங்க நிர்வாகிகள் தேர்வு

சென்னை, ஏப். 15-சென்னை டி. யூ. சி. எஸ். தொழிலாளர் சங்கத்துக்கு 1974 ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. தலைவராக பி. அண்ணாமலை, துணைத் தலைவர்களாக ஆர். வி. கதிர்வேலு, எஸ். வி. சோமசுந்தரம் சி. ராகவன், செயலாளராக ஏ.டி.மோகன் துணைச் செயலாளராக என். கேசவன், பொருளாளராக ஜி. நித்தியானந்தன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 9 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயற்குழு உறுப்பினர்கள். ப. ஞானம், சி. பழனி, எம். சம்பத், என். சிதம்பரம், கே. பழனிவேலு, என். துளசி சி. துரை, காளி, எஸ். எஸ். ஏழுமலை.

தி.மு.கழக ஆட்சிக்கு இரண்டுபக்கம் அடி: கருணாநிதி வருத்தம்

சென்னை, ஏப். 15—'தி. மு. கழக ஆட்சி, இரு பக்கம் அடிவிழும் மத்தளம்போல இருக்கிறது' என்று முதலமைச்சர் கருணாநிதி வருத்தத்துடன் கூறினார்.

தொழிலாளர்களுக்குப் பென்ஷன் தரும் திட்டத்தை இந்தியாவிலேயே தமிழக அரசுதான் கொண்டு வந்திருக்கிறது. ஓராண்டு ஆகியும் இதற்கு மத்திய அரசு அனுமதி தரவில்லையே என்றும் முதல்வர் கவலையுடன் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் சார்பில் ''உழைப்பாளி'' என்ற வார இதழை முதலமைச்சர் கருணாநிதி நேற்று இரவு வெளியிட்டார்.

வெளியீட்டு விழா சென்னை எழும்பூர் ஒயிட் மொமோரியல் ஹாலில் நடந்தது.

விழாவிற்கு பேரவைத் தலைவர் பராங்குசம் தலைமை வகித்தார். செயலாளர் காட்டூர் கோபால் வரவேற்புரை நிகழ்த்தினார்.

உழைப்பாளி முதல் இதழை கழகப் பொதுச் செயலாளர் நெடுஞ்செழியனிடம் முதலமைச்சர் அளித்தார்.

இந்த விழாவில் அமைச்சர்கள் நெடுஞ்செழியன், க. ராசாராம் ஆகியோரும் கலந்துகொண்டு பேசினார்கள்.

உழைப்பாளி வார இதழை வெளியிட்டு முதலமைச்சர் கருணாநிதி பேசியதாவது;—

உழைப்பாளி என்ற மகுடம் புனைந்த நல்ல வார இதழை வெளியிடுவதில் பெருமை அடைகிறேன்.

முதலிலேயே இதழாக இல்லாமல் மலராக மலர்ந்திருக்கிறது.

இதழுக்கு முன் மலர்

52 இதழ்களைத் தந்துவிட்டு ஆண்டுமலர் வெளிவருவது வழக்கம். ஆனால் இங்கே முதலிலேயே மலர்; பிறகு இதழ்.

இது நீண்ட ஆயுளோடு இருக்கும் என்பது துவக்க விழாவிலேயே 500-க்கு மேற்பட்ட சந்தாக்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் தரப்பட்டு இருப்பதிலிருந்து தெரிகிறது. ஆகவே இது தொடர்ந்து நடக்கும்.

அப்படி ஆதரிக்காமலிருந்து உழைப்பாளி உழைத்துக் கொண்டேஇருக்கட்டும்என்று கருதினால் முதலாளியிடம் தொழிலாளி மெலிந்து தேய்ந்து நரம்பும் தோலுமாக காட்சியளிப்பதுபோல ஆகிவிடும்.

முதலில் 12 பக்கம் வெளியிட்டு காகிதப்பஞ்சத்தால் 8 பக்கம் என்று அறிவிப்பார்கள். பிறகு அச்சு இயந்திரம் பழுது என்று பொய்யை சொல்வார்கள்.

அதன் பிறகு ஆசிரியருக்கு உடல்நலம் சரியில்லை என்ற பொய்யை சொல்வார்கள். அதற்குப் பிறகு விற்பனையாளர் சரியாக விற்பனைப் புணம் அனுப்பவில்லை, கிழமை இதழ் நாளிதழாகவரும் என்று அறிவித்து அது வராமலேயே போய்விடும்.

இப்படிப்பட்ட நிலை இதற்கு வராமல் பார்த்துக்கொள்வது உங்கள் பொறுப்பு.

கைராசி

நாங்கள் வெளியிட்டோம். கைராசிக்காரர்கள் என்று சும்மாஇருந்துவிட்டால் பழிச் சொல்தான் வரும். அப்படி வராமல் இருக்க ஆதரவு தரவேண்டும்.

தொழிலாளர்களுக்கு நன்மை செய்வதில் இந்தியாவில் எந்த மாநிலமும் துணிந்து செய்யாத பல நன்மைகளை செய்து இப்பது தமிழ்நாடுதான்.

மூடப்பட்ட மில்களை திறப்பதில் அதிக ஆர்வம் காட்டியது வேறு எந்த மாநிலமும் அல்ல.

மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டால் தமிழ்நாடு ஆயிரம் மடங்கு, லட்சம் மடங்கு பல நன்மைகளைச் செய்து இருக்கிறது.

இருட்டடிப்பு

ஆனால் இதை பத்திரிகைகள் இருட்டடிப்பு செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றன. இருப்பதைத் திருத்தி திசை திருப்புவதுமாக இருக்கின்றன.

இந்தியாவில் எந்த மாநிலத்திலாவது தொழிலாளர்களுக்கு பென்ஷன் தரும் திட்டம் இருக்கிறதா? நாம் தான் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு இதை தந்து இருக்கிறோம்.

இதற்கு தொழிற் சங்கத் தலைவர்கள் பதில் தரத் தயாரா?

35 ஆயிரம் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஓய்வு ஊதிய திட்டத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

பங்களாதேஷ் அதிபர் முஜிபூர் ரகிமான் பங்களாதேஷ் உருவாகும் முன்னால் அது பாகிஸ்தானத்தில் ஒரு பகுதியாக இருந்த போது தேர்தல் பிரகடனத்தில் என் கட்சி வெற்றிபெற்றால் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பு முதலீட்டில் பங்கு கொடுப்பேன் என்றார்.

முஜிபுர் ரகிமான் வெற்றி பெற்றார் தனிநாடும் உருவாகிவிட்டது.

முஜிபுர் சொன்னதுபோல்

தேர்தல் பிரகடனத்தில் முஜிபுர் ரகிமான் சொன்ன அந்த திட்டத்தை நிறைவேற்றினாரே, இல்லையா?

இங்கே தி. மு. கழகம் தேர்தல் பிரகடனத்தில் அத்தகைய திட்டத்தை வெளியிடாவிட்டாலும் அந்த திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறது.

இந்த திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதிக்கவேண்டும் என்று ஒரு ஷரத்து இருக்கிறது.

நாம் அனுமதி கேட்டு ஓராண்டு ஆகிறது. அனுமதி தரவில்லை. இந்த ஓராண்டில் அது நல்ல திட்டம் என்று பாராட்டி இருக்கிறார்கள்.

சோஷலிச மாதா-சோஷலிச சிற்பி என்று பிரமர் இந்திராவைப் பற்றிச்சொல்கிறார்கள். இந்த ஷரத்துக்கு அனுமதி தராமல் இருக்கும் நிலையை வெட்கத்துடனும் வேதனை

4-ம் பத்தி பார்க்க

7-ம் பத்தித் தொடர்ச்சி

யுடனும் சொல்லவேண்டியிருக்கிறது.

வேறு எந்த மாநிலத்திலாவது இப்படிப்பட்ட திட்டம் உண்டா ! இதை எடுத்துச் சொல்ல நாதி யார் ?

இவைகளைச் சொன்னால் தி. மு. கழக ஆட்சிக்கு வலு ஏற்பட்டுவிடும்என்ற காழ்ப்பு உணர்ச்சியினால் வெளியே சொல்ல அஞ்சுகிறார்கள்.

தொழிலாளர்களுக்காக யார் போராடினாலும் நியாயத்தை மதித்து தொழிலாளர் பக்கத்தில் நாம் இருந்தோம்.

பிறகு நாம் ஆட்சிக்கு வந்த பிறகு தொழிலாளர் பிரச்னையில் காட்டும் ஆர்வம் நம்மை நாமே பாராட்டிக்கொள்ளும் வகையில் இருக்கிறது.

இருபக்கம் அடி....

உரலுக்கு ஒரு பக்கம் இடி. மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி என்பார்கள், அதுபோல தி. மு. கழக ஆட்சி இரண்டு பக்கமும் அடிவிழும் மத்தளமாக இருக்கிறது.

நாம் தொழிலாளர் பிரச்னையில் தொழிலாளர் பக்கம் இருப்பதால் ஆதிக்கக்காரர்கள் எதிர்க்கிறார்கள்.

முற்போக்கு என்று சொல்லும் இடதுசாரிகள் தி. மு. கழக ஆட்சி என்ன செய்தது என்று கேட்கிறார்கள்.

அய்யோ நாம் வந்துசெய்ய வேண்டிய காரியங்களை இவர்கள் செய்துவிடுகிறார்களே என்று நம்மை எதிர்க்கிறார்கள். இரு பக்கமும் இடிவாங்கும் மத்தளமாக தி, மு. கழக ஆட்சி இருக்கிறது.

ஆதிக்ககாரர்களின் எதிர்ப்பு. இடதுசாரிகளின் சங்கடம் முதலியவைகளைத் தாங்கிக்கொண்டு தொழிலாளர்களுக்குப் பாடுபட்டு வருகிறோம்.

இவ்வாறு முதல் அமைச்சர் கருணாநிதி பேசினார்.

நீர் மட்டம்

சென்னை, ஏப். 15—

மேட்டூர்	5·82	மீட்டர்
பெரியாறு	2·89	..
வைகை	16·61	..
பாபநாசம்	25·18	..
கிருஷ்ணகிரி	11·70	..
சாத்தனூர்	26·90	..
மணிமுத்தாறு	28·91	..
பேச்சிப்பாறை	1·20	..
பெருஞ்சாணி	2·65	..

சோஷலிச மாதா ஆட்சியில்

தொழிலாளர்களுக்கு பங்கு தரப்படுகிறதா? ராசாராம் கேள்வி

சென்னை, ஏப். 15—சோஷலிச மாதா என்று அழைக்கும் இந்திரா காந்தி ஆட்சியில் தொழிலாளர்களுக்கு பங்கு தரப்பட்டு இருக்கிறதா ? என்று அமைச்சர் ராசாராம் கேட்டார்.

'உழைப்பாளி' என்ற வார இதழ் வெளியீட்டு விழாவில் தொழிலாளர் நல அமைச்சர் ராசாராம் பேசியதாவது:—

உழைப்பாளி மக்களோடு தொடர்பு கொண்டது. தி.மு.கழகம். இங்கே உழைப்பாளியை யார்வெளியிடுகிறார் என்று பார்க்க வேண்டும்.

அந்த நாளில் 'தூக்கு மேடை நாடகத்தில்' உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்ற முழக்கத்தை ஒலிக்க வைத்தவர் நமது முதல்வர்.

பல்வேறு காலங்களில் உழைப்பாளி மக்களுக்காக பல கதைகளையும், நாடகங்களையும் அமைத்தவர். போராட்டங்களை நடத்தி தன்னைத் தானே வருத்துக் கொண்டவர் உழைப்பாளர்களுக்காக புதியதோர் உலகை உருவாக்கி வரும் முதல்வர் இந்த உழைப்பாளியை வெளியிடுகிறார்.

முதல்வர் கருணாநிதி ஆட்சியில் எவ்வளவோ பெரிய காரியங்கள் நடந்து இருக்கின்றன.

உழைக்கும் வர்க்கத்தின் கோரிக்கைகளை தி. மு. கழக ஆட்சி நிறைவேற்றித் தந்து இருக்கிறது.

தொழிற்சங்கம் இல்லாமல், கொடி இல்லாமல், தலைவர் இல்லாமல் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் கண்ணீரும் கம்பலையுமாக — ஏன் என்று கேட்க நாதி அற்று இருந்தார்கள்.

லட்சக்கணக்கான அந்த விவசாயத் தொழிலாளர்கள் பாதுகாப்பற்று இருந்தார்கள். அவர்கள் வாழ்க கோஷம் போடவில்லை; ஒழிக கோஷம் போடவில்லை. கொடி தூக்கவில்லை. தாங்கள் உண்டு; தங்கள் உழவுத் தொழில் உண்டு என்று இருந்தார்கள்.

அந்தத் தொழிலாளிக்கு இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யாத நிலையில் தமிழகத்தில் மட்டும் அவர்களுக்கு குறைந்தபட்சக் கூலியை உருவாக்கிக் கொடுத்தது.

வாயில்லா ஊமைகளாக இருந்தவர்களைக் காத்தவர் நமது முதல்வர்:

பனைமரம், தென்னை மரம், பாக்கு மரம் ஏறும் தொழிலாளி மரம் ஏறும்போது இறந்தால் அவர்களுக்காக எந்தக் கட்சியாவது போராடியதா? அவர்கள் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் அளிப்பது தி.மு. கழக ஆட்சி ஒன்றில்தான்.

ஆழ்கடல் சென்று பிடிக்கச் செல்கிறவர்கள் வாழ்வா? சாவா? என்று போகிறார்கள். அவர்கள் கடலில் மரித்தால் அவர்களின் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் என்று சொன்ன ஒரே அரசு தி. மு. க. அரசுதான்.

எந்த மாநிலத்திலும் இது போல செய்ததில்லை என்று கன்னத்தில் அடித்தாற்போல இவைகளை நாம் சொல்ல முடியும்.

பஞ்சாலை தொழிலாளர்கள் போராட்டம் நடத்தியபோது அவர்களுக்கு என்ன ஆனாலும் கொடு என்று சொன்னவர் நம் முதல்வர்;

இந்திரா காந்தியை சோஷலிச மாதா—சமதர்மச் சிற்பி என்று சொல்கிறார்கள். இந்தியன் ஏர்லைன்சில் வேலை நிறுத்தம் நடந்தபோது என்ன செய்தார்? கதவடைப்பு செய்தார்.

அந்த ஆட்சியையும் பாருங்கள். இங்குள்ள ஆட்சியையும் பாருங்கள். இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்யும் ஆட்சி இந்தியாவில் எங்கும் இல்லை.

மத்திய அரசு பல தொழிற்சாலைகளை நடத்துகிறது. அவைகளில் தொழிலாளர்களுக்குப் பங்கு தந்து இருக்கிறதா?

இதுபற்றி எந்தக் கட்சியாவது கேட்டது உண்டா? இங்கே நாம்தான் கொடுத்திருக்கிறோம் என்றார் ராசாராம்.

திடீர் அணை: ரஷியா சாதனை

மாஸ்கோ, ஏப். 15—சில நிமிட நேரத்திற்குள் ''திடீர் அணை''யைக் கட்டி முடிக்க ரஷியா திட்டமிட்டுள்ளது.

ரஷியாவில் உள்ள நாரின் ஆற்றின் குறுக்கே 3 கிலோ மீட்டர் நீளத்திற்கு சுமார் 1,000 அடி உயரத்திற்கு உத்தேச அணை சிலநிமிட நேரத்திற்குள்கட்டி முடிக்கப்படும்.

இந்த அணையைக் கட்டுவதற்காக, 25 அணு குண்டுகளின் மொத்த சக்தியைக் கொண்ட அளவுக்கு அதாவது 5 லட்சம் டன் எடைக்கு வெடி மருந்துகள் வைத்து தகர்க்கப்படும். இதன் விளைவாக சில நிமிடத்திற்குள் 50 கோடி கனமீட்டர் அளவுக்கு பாறைகள் தகர்க்கப்படும்.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது மிச்சமான வெடி மருந்துகளைக்கொண்டு இந்த பாறை தகர்ப்பு வேலை நடைபெறும்.

ரஷியாவின் முதலாவது திடீர் அணை 1966-ம் ஆண்டில் கட்டப்பட்டது. அப்போது அல்மா அடா நகருக்கு அருகே சுமார் 150 அடி உயர அணை சில நிமிட நேரத்திற்குள் கட்டப்பட்டது.

Printed by S. V. G. Sowrirajulu at the M. C. P. P. S. Press, No. 4, South Bank Road Madras-600028 and Published by him for the Madras Co-operative Printing and Publishing Society Ltd.

Chief Editor: S. V. G. Sowrirajulu.

Honorary Editor: N. Muthukumarassami.